22 FEB 19
MADRAS



## கும்பகோண க்ஷேத்திர

# மகாமக மகாத்மியம்

### ஓர் வியாஸம்

சிலகாலம் மாயவரம்
முனிசிபல் ஹைஸ்கூல் உதவி உபாத்தியாயராகவும்
தற்காலம் கும்பகோணம்
டவுன் ஹைஸ்கூல் உதவி உபாத்தியாயராயிருக்கிற
**K. P. பஞ்சாபகேசய்யரால்**
இயற்றப்பட்டு

**T. G. சுப்பிரமணிய அய்யருடைய**
மேற்பார்வையில்

தஞ்சை
**கல்யாணசுந்தரம் பவர் பிரஸ்ஸில்**
அச்சிடப்பட்டது.

[...0,000]. **1921.** [விலை அணா 3.

Q23:38·2119 3 KM
N21
125898

# THE NEW BOMBAY HALL,

## KUMBAKONAM.

வாருங்கள்! வந்து பாருங்கள்!! வாங்கி அனுபவியுங்கள்!!!

குறைந்த விலை! உயர்ந்த ரகம்!!

நாணயமான தினுசுகள்!!!

## மகாமகத்தை உத்தேசித்து

## ரொம்பவும் குறைந்த விலைக்கு விற்கும் பலவகையான

## ஜவுளி தினுசுகள் விளம்பரம்,

டுவீடு, அல்பாக்கா, டசூர், டுமாகீர் கம்பளி தினுசுகள், கியாஸ், வயலா பிளானல்கள், ஜெர்மன், கான்பூர் கம்பளி சால்வைகள், இந்தியா, சைனா, ஜப்பான், பனாரிஸ், புனா, ஜரிகை ஜிக்னா சேலை பட்டுப் புடவைகள், கராச்சி, பெங்களூர் முந்தி சேலைகள், பட்டு அங்க வஸ்திரங்கள், வெல்வெட், ஸாட்டின், சில்க் ரவிக்கை தினுசுகள், இமிடேஷன் சேலைகள், பெல்ஜியம், காலிகட், ஷோளாபூர், கோயம்புத்தூர், ஹாலண்டு செக்குகள், கோகர்ஜான் சேலைகள், கருவூர், பவானி ஜமக்காளங்கள், காப்பிகலர் சேலைகள், அகலமான மல்லுகள், லாங்கிளாத்துகள், கோராமல் தினுசுகள், சீட்டி சேலைகள், ஆமடாபாத், பம்பாய் புனா கரை வேஷ்டிகள், பியான்சியான சீட்டி ரகங்கள், டுவில், ஜபர், இமிடேஷன் ரெடிமேடு ஷர்ட்டுகள், பனியன் தினுசுகள், குழந்தை சட்டைகள், குல்லாய்கள், நெட், கொசுவலை, பெட்ஷீட்டுகள், பிளாங்கெட்டுகள், கம்பளி மப்ளர், காட்டன் சால்வைகள், துண்டுகள், துவாலை தினுசுகள், உயர்ந்த குடை தினுசுகளும், இன்னும் பலரக ஜவுளி வகையறுக்களும் குறைந்த விலைக்கு விற்கக்கூடிய இடம் இதுதான்.

**ஒருமுறை ந்யூபாம்பே ஹாலுக்கு வந்து பாருங்கள்.**

**E. M. ESMAIL HASAM & CO.,**
***The New Bombay Hall,***
***KUMBAKONAM.***

22 FEB 1921
MADRAS



# முகவுரை.

## கும்பகோணம் என்பது ஒரு மகாக்ஷேத்திரம்.

---

அதற்கு ஈடான புண்ணிய பூமி, பூதலத்தில் இல்லை என்றே சொல்லவேண்டும்

(a) இது பரமசிவனாலும், மகாவிஷ்ணுவாலும் அதிக பிரேமையுடன் வாசம் செய்யப்பட்ட ஸ்தலம்.

(b) மாந்தாதா, மதங்கமுனி, தூமகேது, சூரியன், இவர்களால் கடும் தவம் செய்து, பரபிரும்மத்தின் தரிசனத்தை அடைந்து, சாயுஜ்யம் பெற்ற விடமிதுவே.

(c) இந்த க்ஷேத்திரத்தின் மகிமையை அறிந்தே ஆதிசங்கர பரம்பரையை சேர்ந்த காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளாகிய ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகள், தக்ஷிணதேசத்தில் ஆரிய தர்மத்தை நிலை நிறுத்துவதற்காக, இங்கு ஸ்திரமாகவாசத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பூர்வம் பௌத்தமதத்தை கண்டிக்கவும், ஷண்மதஸ்தாபனம் செய்யவும் பரமசிவன் சங்கராசாரியாராக அவதரித்தபொழுது கைலாசத்திலிருந்து ஐந்து லிங்கங்களுடன் வந்ததாகவும், அவைகளில் ஒன்று நேபாளத்திலும், ஒன்று ஜகந்நாதத்திலும், ஒன்று சிதம்பரத்திலும், ஒன்று காமகோடி பீடாதிபதியினிடத்திலும், மற்றொன்று சிருங்கேரி பீடாதிபதியினிடத்திலும் இருப்பதாக பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஸ்ரீ ஜகத்குருவின் பூஜையிலிருக்கும் திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவரஸ்வாமியை மானிட ஜென்மமெடுத்த ஒவ்வொருவனும் தரிசனம் செய்து சிவசாயுஜ்ய பதவியை அடையவேண்டும் இவ்வூரிலேயே இதர மதாசிரியர்களுடைய மடங்களும் இருக்கின்றன அவைகளாவன அஹோபலமடம் வியாஸராய மடம், விஜயேந்திரஸ்வாமி மடம். உத்தராதி மடம்.

(d) இப்புண்ணிய பூமியில்தான், இந்தியாவுக்கு ஆயுள்முழுவதும் சிநேகிதராயிருந்த ஸர் ஹென்றிகாட்டன் துரை என்ன, இராஜ்ய தந்திரத்தில் அபார வல்லமையை காண்பித்த, ஸர் ஏ சேஷையா சாஸ்திரியார் K. C. S. I. ஸர். டி மாதவராயர், திவான்பஹதூர் ஆர் ரகுநாதருவ்

75898



C. S. I., ஆங்கிலேயபாஷைத போதனு சிரேஷ்டரான ராயபகதூர் டி. கோபாலராயர், கவிசிரேஷ்டராகிய காளமேகப் புலவர், கணிதசாஸ்திர பாரகதரான் ராமானுஜன் என்ன, தற்சமயம் சென்னை கவர்னர் நிர்வாக சபையில் அங்கத்தினர் பதவி வகிக்கும் ஸ்ரீமான் K. ஸ்ரீனிவாஸய்யங்கார் என்ன, இவர்கள் அவதரித்தார்கள். அமுதத்தினால் நனைக்கப்பட்ட இக்கும்பகோண வைபவமே வைபவம்!!

(e) இது தற்காலம் ஒரு முனிசிபல் நகரம். பட்டு வஸ்திரங்களுக்கும், வெள்ளி, ஈயம், பித்தளை, வெண்கலம் முதலியவைகளால் செய்யப்பட்ட பாத்திரங்களுக்கும் பெயர் பெற்றது. அஷ்டலக்ஷ்மிகளும் இங்கு ஸ்திரமாய் வாசம் செய்கிறார்கள். ஒரு சர்க்கார் காலேஜும், மூன்று ஹைஸ்கூல்களும், பற்பல சிறு பள்ளிக்கூடங்களும் இவ்வூரில் உள. இந்நகரத்திற்கு தென் இந்தியா கேம்ப்ரிட்ஜ் என்று பெயர் விளங்குகிறது. கல்வெட்டு அக்ஷரங்களால் சரித்திர ஆராய்ச்சி செய்யும் மாணாக்கர்களுக்கு, இவ்வூர் பாணபுரீச்வரர், நாகேசுவரர், சாரங்கபாணிஸ்வாமி கோவில்கள் நல்ல சாதனத்தை கொடுக்கின்றன.

(f) மேற்கூறிய எல்லா ஆச்சரியங்களை காட்டிலும் விசேஷமான ஓர் அற்புதம் கும்பகோணத்தில் ஏற்படுகிறது. அங்கு பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை, தேவகுருவாகிய பிரஹஸ்பதி பகவான் சிங்கராசியிலும் சூரியன் கும்பராசியிலும், சந்திரன் குருவுடன் ஸிம்ஹத்தில் சேரும் மக நக்ஷத்திரம் பொருந்திய பௌர்ணமிதினம், மகாமக புண்ணியகாலம் ஏற்படுகிறது. அப்பொழுது அங்குள்ள கன்னியாதீர்த்தத்தில் நீராடுபவர்களுடைய பாவக் கூட்டங்கள் சூரியனைக்கண்ட பனிபோலும், அக்னியைக் கண்ட பஞ்சு மூட்டைபோலும் நாசத்தை அடைகின்றன. அநேக அசுவமேத யாகங்கள் செய்த பலனை கொடுப்பதுடன்கூட ஈசுவர ஸாயுஜ்ய பதவியையும் அளிக்கின்றது. இப்புண்ணிய பூமியின் பெருமையை மஹரிஷிகள் காசிகண்டத்தில் பின்வருமாறு புகழ்ந்திருக்கிறார்கள்.

அந்யக்ஷேத்ரே க்ருதம் பாபம் புண்யக்ஷேத்ரே விநச்யதி!
புண்ய க்ஷேத்ரே க்ருதம் பாபம் வாராணஸ்யாம் விநச்யதி!!
வாராணஸ்யாம் க்ருதம் பாபம் கும்பகோணே விநச்யதி!
கும்பகோணே க்ருதம் கும்பகோணே விநச்யதி!!

வேறு இடங்களில் செய்யும் பாவம் புண்யக்ஷேத்திரத்திலும், புண்ய க்ஷேத்திரத்தில் செய்யும் பாவம் காசியிலும், காசியில் செய்யும் பாவம் கும்பகோணத்திலும், கும்பகோணத்தில் செய்யும் பாவம் கும்பகோணத்திலுமே நாசத்தை அடைகின்றன.

மேற்கூறிய வைபவத்துடன் கூடிய சோழநாட்டின் திலகமாகிய கும்பகோண நகரை வர்ணிக்க ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனாலும் மாளாது. இத்தலபுராணம் என்கிற கண்ணாடியை (Lens) வைத்துக்கொண்டு எழுதத் துணிந்தேன். அன்னபக்ஷி நீரைவிலக்கி பாலை பருகுவதுபோல் பிழைகளை விலக்கி குணங்களை ஏற்கும்படி வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கும்பகோணம் }
16—1—1921. }

K. P. பஞ்சாபகேச அய்யர்.



கும்பகோண க்ஷேத்திரம்.

# ஆதி வரலாறு.

ஆதிகாலத்தில் உலகசிருஷ்டி கர்த்தாவாகிய சதுர்முகபிரும்மா, கீழ்நோக்கிய கண்களுடனும், வாடின வதனத்துடனும், நவரத்னகசிதமான மண்டபத்தில், பார்வதிதேவியுடனும், பிரமதகணங்களோடும் திருக்கொலுவில் வீற்றிருக்கும் பரமசிவனிடம் பின்வருமாறு விண்ணப்பம் செய்துகொண்டார்:—“ஸர்வேசா, மகாபிரளயம் சமீபித்து விட்டதே. உலகமெலாம் அழிந்துவிடுமே. யான் சிருஷ்டிசெய்ய என்செய்வேன்.” உமாபதி பிருமமாவைப்பார்த்து “தாங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். அமிர்தம்விட்டு பிசைந்த மண்ணால் செய்யப்பட்ட ஒரு குடத்தில் ஜகத்சிருஷ்டி பீஜங்களையும், வேதம், ஸ்மிருதி, இதிஹாஸம் முதலியவைகளையும்வைத்து, அமுதம்விட்டு நிரப்பி, அக்கலசத்தை நூல் சுற்றி மாவிலை, தேங்காய் பூணூல், தர்ப்பை, சந்தனம், இவைகளால் அலங்கரித்து, வில்வார்ச்சனை செய்து, மகாமேருபர்வதத்தின் தென்பால் ஓர் உறியின்மீது வைத்துவிடும். அவ்வுறிபிரளயத்தில் அழியாது. உலகசிருஷ்டிக்குக்காரண பூதமாகும்” என்று திருவாய் மலர்ந்தருளினார். பிருமதேவன் சிவாஞ்ஞை பிரகாரம் செய்தார். எங்குபார்த்தாலும் வெள்ளம் பிரவஹிக்க ஆரம்பித்து விட்டது. மழை தாரை தாரையாய் பொழிய ஆரம்பித்தது. சண்டமாருதம் பிரசண்டமாய்வீச ஆரம்பித்தது. அண்டசராசரங்கள் அனைத்தும் அழிந்தன. அலைகளாலும், வாயுபகவானாலும் அலக்கப்பட்ட உறி தென்திசையை நோக்கி மிதந்து வந்தது. அதன்மேலிருந்த தாப்பையும் மாவிலையும் கீழே ஓர் இடத்தில் வீழ்ந்தது. அவ்விடம் தான்திருப்புறம்பியம். தர்ப்பை சமிவனேசர் என்னும் ஓர் லிங்கமாக மாறிற்று. மாவிலை வன்னிமரமாகிவிட்டது. லிங்கத்தை ஸப்தகன்னியர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். கும்பமோ அத்தலத்திற்கு மூன்று மைலுக்கப்பால் தங்கிற்று. மகாக்ஷேத்திரம் இது என்று ஓர் அசரீரவாக்கு உண்டாயிற்று. தேவர்கள் மலர்மாரி சொரிந்தார்கள். கலசம் பூமியில்தங்கிற்று. பிரும்மா ஆச்சரியப்பட்டார்

குடத்திற்கு சற்றுகீழ்திசையில் உறிவிழுந்தது. அதுதான் சோமனாதன். அதன் கிழக்கே வில்வம் விழுந்தது. இது தான் வில்வக்காட்டிலிருக்கும் நாகேசுவரன். கலசத்தின்மேலிருந்த தேங்காய் ஓர் லிங்கமாக செவ்விள

Missing | 164

கீர் மாத்தடியில் தோன்றிற்று. அமுதகுடர் என்கிற அபிமுகேசர் இவர்தான். கலசத்தின்மேலிருந்த பூநூல் ஓர் லிங்கமாக மாறிவிட்டது. இவரை கௌதமேசுவரர் என்று கூப்பிடுகிறார்கள்.

சிவபிரான் வேடவேஷம் பூண்டு அக்கும்பத்தை பார்க்க விரும்பி சகல பரிவாரங்களுடன் மத்யார்ச்சுனத்துக்கு கீழ்பக்கம் வந்து, மேற்றிசையை நோக்கி அம்பு எறிந்தார். சமீபத்திலிருந்த ஓர் ஐயனார் இந்த அம்பினால் குடத்தையுடைக்கும்படி வேண்டினார். அவ்வம்பு கலசத்தை பேதிக்கவில்லை. பரமசிவன் அவரை ஏகபாணசாஸ்தா என்று கூப்பிட்டார். பாணவண்டுறை என்னுமிடத்தில் இருக்கும்படிக்கும் கட்டளையிட்டார். பிறகு கிராதரூபியாகிய ஈசன் இடைபாணபுரி என்னும் இடத்திலிருந்து கலசத்தை உடைத்தார். கும்பத்தின் மூக்கு குடவாயிலில்போய்விழுந்தது. உடைந்த மூக்கின் வழியாக அமுதம் நாலாபக்கத்திலுள்ள பூமியை நனைத்தது. அமுதம் நனைத்த பூமிக்கு பஞ்சக்குரோசம் என்று பெயர். அமுதம் தங்கிய தடாகங்களுக்கு பொற்றாமரை, கன்யர்தீர்த்தம் என்று பெயர்

வெள்ளம் வடிந்தவுடன் அமுதத்தால் நனைந்த மண்ணைசேர்ப்பித்து கலசத்தின்மேல் ஓர் லிங்கமாக செய்து பிரமன், இந்திரன், முதலான தேவர்கள் முன்னிலையில் பரமசிவன் லிங்கத்துடன் சேர்ந்து மறைந்தார்.

உலகக்ஷேமத்திற்காக தேவர்கள் மங்களநாயகியை ஈசனுடைய இடது பக்கத்தில் வைத்தார்கள். இவைகளெல்லாம் மாசிமாதத்தில் நடைபெற்றன, பிரும்மா ஆலயாதிகள் கட்டி சகலதேவர்களோடு உற்சவம் நடத்தஆரம்பித்தார். அப்பிரும்மோத்ஸவம்தான் இப்பொழுதும் நடந்துவருகிறது. பிரும்மா ஆதிகும்பேசுவரரை அச்சமயம் அடியிற்கண்ட வரன்களைக்கேட்டார்.

1. அனைவருக்கும் கும்பேசுவாருடைய தரிசனம் சகல அபீஷ்டங்களையும் கொடுக்கவேணும்.

2 பிரதோஷதரிசனம் கைலாசத்தையும், கிருத்திகைஸோமவாரத்தில் வில்வார்ச்சனையும் நெய்தீபமும் சிவஸாயுஜ்யத்தையும் அளிக்கவேண்டும்.

3 மாசிமாத மகஸ்நானம் பிரும்மஹத்திதோஷத்தை போக்க வேணும்

4. மகஸ்நானத்திற்கு 12 தப்தகிருச்சிரபலன்கள் ஏற்படவேணும்.

5 மகாமக உற்சவத்திற்கு ஒரு வருடம் முந்தியே தேவர்கள் கும்பகோணம் வரவேண்டும்.

6 யாத்திரிகர்கள் பதினாயிரம் அசுவமேதபலனை அடையவேண்டும், சந்திரருடன் "அங்ஙனமே ஆகுக" என்று வாக்களித்தார்.

அமுதம் பரவிய பல க்ஷேத்திரங்கள் ஏற்பட்டதாலும், பரமசிவன் உடைந்தகுடத்தின்மேல் மண்ணைப்பிடித்து இலிங்காகாரமாகவைத்து பூஜை செய்ததாலும், கும்பகோணம் என்று பெயர் உண்டாயிற்று.

இத்தலத்திற்கு பாஸ்கரக்ஷேத்திரம் என்றும் பெயர் உண்டு, மலை அல்லது நதியின் அருகாமை, மும்மூர்த்திகளின் சான்னித்தியம், அவர்கள் சூரியனால் பூஜிக்கப்படுதல், இம்முக்குணம் பொருந்திய க்ஷேத்திரம்தான் பாஸ்கரக்ஷேத்திரம் என்று புராணம் கூறுகின்றது.

க்ஷேத்திரம் என்றால் என்ன? அது ஒரு புண்ணியபூமி. அதன் அங்கங்கள் யாவை? பிரும்மா, விஷ்ணு, ருத்திரர்வாசம் செய்யவேணும். புண்ணியதீர்த்தங்கள் இருத்தல்வேண்டும். மகரிஷிகள் தவம்செய்து ஈசுவரசாக்ஷாத்காரத்தை அடைந்திருக்கவேண்டும். கும்பகோணம் எல்லா இலக்ஷணங்களையும் அடைந்திருக்கிறது.

## ஆலயங்கள்.

1. கன்னியா தீர்த்தக்கரையின் வடபக்கத்தில் வீற்றிருக்கும் நவகன்னியர்களோடு கூடிய காசிவிசுவநாதரை தரிசித்தமாத்திரத்தில் சகல அபீஷ்டங்கள் கைகூடுகின்றன. சகல மூர்த்திகளை பார்த்த பலன் சித்திப்பதுடன் சுவர்க்கவாஸமும் ஏற்படுகிறது.

2. கீழ்கரையில் மேற்றிசை நோக்கி இருக்கும் அபிமுக்தேசுவரரை தரிசிப்பவருக்கு மறு ஜன்மமில்லை.

3. மேல்கரையில் இருக்கும் கௌதமேசுவரர் ஜன்மஸாபல்யத்தையும், குபேர சம்பத்தையும், பக்தர்களுக்கு அளிக்கிறார்.

4. வில்வ வனத்தில் நாகேசுவரர் மகாமக குளத்தின் வடமேற்கு மூலையில் இருக்கிறார். சிவஸாயுஜ்யம் அவரை தரிசிப்போருக்கு ஏற்படும்.

5. சோமேசர் நாகேசருக்கு வடக்கு மூலையில் இருக்கிறார்.

6. சோமேசருக்கு வடக்கில் ஹேமமுனிவரின் தவம் சித்தியடைவதின் பொருட்டும், அசுரர்களை ஸம்ஹாரம் செய்யவும் ஸ்ரீ தேவியோடும் பூதேவியோடும் சாரங்கபாணி சேஷசாயியாய் இருக்கிறார். அவரை பார்த்த மாத்திரத்தில் பாவம் பறந்தோடுகிறது. விஷ்ணு சாயுஜ்யம் ஏற்படுகிறது. மகா ஸங்கராந்திதினம் பொற்றாமரை ஸ்நானம் விசேஷம்.

7. ஆராவமுதனுக்கு நேர்மேற்கில் ஆதிகும்பேசுவரர் இருக்கிறார். கடும்தவம் செய்திருந்தாலொழிய அவர் தரிசனம் ஏற்படாது. வெள்ளிக்கிழமையில் மங்களநாயகியின் தரிசனம் விசேஷம்.

8. கும்பேசுவரருக்கு தென்மேற்கில் மாலதிவனத்தில் தூமகேது முனிக்கு தரிசனமளித்த ஆதிவிசுவேசுவரர் வீற்றிருக்கிறார்.

9. கும்பேசுவரருக்கு வடக்கில் காவிரியின் தென்கரையில் பூவராஹர் எழுந்தருளியிருக்கிறார்.

10. காசியபருக்கு காட்சி கொடுத்த இலட்சுமி நாராயணர் காவிரி தீரத்தில் இருக்கிறார்.

11. காவிரிக்கு வடபக்கத்தில் மதங்கருக்கருளிய வரதராஜன் வீற்றிருக்கிறார்.

12. காவிரிக்கு தென்கரையில் சூரியனுக்கு அருளிய சக்கிரபாணியாகிய நரசிம்மன் இருக்கிறார்.

சக்கிரபாணிக்கு நேர்கிழக்கில் பாணபுரீசர் ஸான்னித்தியமாயிருக்கிறார்.

## புராணத்தில் கூறப்படாத கோவில்கள்.

1. காளத்தி நாதன். 2. ராமஸ்வாமி. 3. வரதன். 4. சாரநாராயணன். 5. வேதநாராயணன்.

## கும்பகோணத்தின் புண்ணிய தீர்த்தங்கள் 15

காவேரிக்கரை கட்டங்கள்

1. காசியபதீர்த்தம் (சோலையப்பன் தெரு கீழ்கோடி)

2. கதா தீர்த்தம் (ஓடத்துறை)

3. சக்கிரதீர்த்தம். வேதாரண்ணியத்திலிருந்து காசியாத்திரைபோகும் வழியில் இங்குதங்கின ஓர் பிராம்மணசிரேஷ்டருடைய தகப்பனாரின் எலும்பு இவ்விடத்தில் தாமரைப்பூவாக மாறிவிட்டது. ஆகையால் காசியை நோக்கிகொண்டு போகப்பட்ட அஸ்தி இங்கு மீண்டும் கொண்டுவிரப்பட்டது.

4. ஈசான்ய தீர்த்தம்

5. பிரும்ம தீர்த்தம் (அரசலாறு பிரும்மன் கோவில் துறை)

### தடாகங்கள்.

6. கன்னியா தீர்த்தம் (மகாமக தீர்த்தம்)

7. ஹேமபுஷ்கரிணி (பொற்றாமரை)

8. கௌதம தீர்த்தம்

9. இந்திர தீர்த்தம்
10. வியாச தீர்த்தம்
11. ஸோம தீர்த்தம்
12. வராஹ தீர்த்தம்
13. வருண தீர்த்தம்
14. நாக தீர்த்தம் (நாகேசுவரன் கோவில் சிங்கிணறு)
15. பாதாளகங்கை (ஸோமனுதன் கோவில் கிணறு)

## கும்பகோண க்ஷேத்திர யாத்திர முறை

1. பஞ்சக்குரோசம், அஷ்டாதசஸ்தானம் இவைகளின் யாத்திரை.
2. மகாமகஸ்நான விருதம்.
3. க்ஷேத்திர ஆலயங்களிலுள்ள மூமூர்த்திகளின் தரிசனம்.

## பஞ்சக் குரோச யாத்திரை.

அமுதத்தால் நனைக்கப்பட்ட பூமிக்கு பஞ்சக்குரோசம், அஷ்டாதசஸ்தானம் என்று பெயர். இந்தயாத்திரைக்கு சமமான யாத்திரை இப்பூவுலகில் எங்குமில்லை. யாத்திரையால் யமகிங்கராளுடைய பாதை நீங்குகிறது. இஷ்டங்கள் சித்திக்கின்றன. பாவங்கள் போகின்றன. ஒரேதினத்தில் அஷ்டாதசஸ்தானங்களையும் தரிசிப்போன் பூமிபிரதக்ஷிணம் பண்ணின பலனை அடைகிறான். சிவலோகம விஷ்ணுலோகம் இவைகளை அடைகிறான்

பஞ்சக்குரோசக்ஷேத்திரமாவன.

1. திருவிடைமருதூர்
2. திருநாகேசுவரம்; உப்பிலியப்பன் கோவில்
3. ருத்திராட்சவனம் என்னும் தாராசுரம்
4. சுவாமி மலை
5. பாடலவன மென்னும் கருப்பூர்

## அஷ்டாதச ஸ்தானங்களாவன.

1. மத்தியார்ஜுனம்
2. திருபுவனம்.
3. அம்மாசத்திரம்.
4. திருநாகேசுவரம்; உப்பிலியப்பன் கோவில்.

5. செவ்வியவரம்பை; அய்யாவாடி.
6. சிவபுரம்.
7. சாக்கோட்டை.
8. மருதாநல்லூர்.
9. பட்டீசுவரம்.
10. திருசத்திமுத்தம்.
11. தாராசுரம்.
12. திருவலம் சுழி.
13. சுவாமிமலை.
14. இன்னம்பூர்.
15. திருப்புறம்பியம்.
16. கொட்டையூர்.
17. கருப்பூர்.
18. வாணாதுரை.

## 1 பஞ்சக்குரோச யாத்திரை.

---

### மத்தியார்ஜுன வைபவம்

கும்பகோணத்துக்கு நாலுமைலுக்குக் கிழக்கில் 24 சதுர்யுகங்கள் விபண்டக மகாமுனி அர்த்த நாரீசுவரரை காண கடும் தவம் செய்தார். பரமசிவன் விருஷபாரூடராக தைமீ பௌர்ணமி தினம் புஷ்ய நட்சத்திரத்தில் பிரசன்னமாகி அவர் இஷ்டத்தை நிறைவேற்றினார். காச்யபரிஷி பாலகிருஷ்ணனை காண 12 வருஷங்கள் தவம்செய்து மருத மரத்தடியில் காட்சி கண்டார். உலகத்திற்கு உய்வு உண்டாகும் பொருட்டு ஹரிஹரர் இருவர்களும் ஓர் மருதமரத்தின் இடையில் தோன்றினபடியால் இவ்வூர் திருவிடைமருதூர் என்று கூப்பிடப்படுகிறது. ஸ்வாமி மகாலிங்கம் அம்பிகை பிருகத்குசாம்பாள். இவ்வூரில் மூன்று புண்ணிய தீர்த்தங்கள் உள. ஒன்று கலியாண தீர்த்தம் காவிரி ஸ்நானகட்டம். தைமீ பௌர்ணமி புஷ்ய நட்சத்திரம் கூடிய தினத்தில் அபஜித் முகூர்த்தத்தில் ஸ்நானம் பிரும்மஹத்யாதி பாபத்தை போக்கி முக்தியை தருகின்றது.

மகாலிங்கத்தின் சன்னிதியில் இருக்கும் தீர்த்தம் காருண்ணியாமிருத தீர்த்தம். கருங்காக்கையின் உடல் பொன்னிறமாகியதும், உரோமசருக்கு ஞானம் கொடுத்ததும் இப்புண்ணிய தீர்த்தத்தில் மேஷசங்கிரமண ஸ்நான தான். வாயுதிக்கிலுள்ள தீர்த்தத்தில் வைகாசி மாதத்தில் ஸ்நானம் பண்ணினால் பாவரஹிதர்களாகி நற்கதியை அடைகிறார்கள்.

## 2 திருநாகேசுவரம்.

கும்பகோணத்திற்கு இரண்டு மைல்தூரத்தில் கிழக்கில் ஓர்க்ஷேத்திரம் உள்ளது. அதன்பெயர் திருநாகேசுவரம். இங்கு ஆதிசேஷன் நூறுவருஷம் தவம் புரிந்து இஷ்டங்களை அடைந்தார். அதற்கு பிறகு 1000ம் வருஷம் தவம் செய்து நாகவாவி என்று ஒரு தடாகத்தை ஏற்படுத்தி பரமசிவனை அர்ச்சித்து, தடாகத்தில் ஸ்நானஞ்செய்து நாகநாதனை தரிசிப்போர்களுக்கு சிவஸாயுஜ்ய பதவிகிடைக்கவேண்டும் என்று வரம்பெற்றார். இத்தடாகத்தில் ஆதித்தன் கார்த்திகை சோமவாரத்தில் மூழ்கி நற்கதியடைந்தான். இத்தீர்த்தத்திற்கு தருமதீர்த்தம் என்று பெயர். கார்த்திகை ஞாயிற்றுகிழமையில் சூரியபுஷ்கரிணியில் ஸ்நானமும், நாகேசதரிசனமும், முக்கியம். கார்த்திகை சோமவாரத்தில் வாசுகி மூழ்கி முதல்யாமத்தில் நாகேசரையும், இரண்டாம்யாமத்தில் சமிவநேசரையும், மூன்றும் யாமத்து புன்னுகவனேசரையும் பூஜித்து நான்காவது யாமத்தில் மூவரையும் துதித்து தியானித்து முக்தியடைந்தான்.

இதற்கருகாமையில் ஆகாசநகரம் என்று பெயர்பெற்ற துளஸீவனத்தில் மார்க்கண்டேயமகரிஷி, லக்ஷ்மிதேவியை புத்திரியாக அடைய கடும்தவம் ஆயிரம்வருஷம் செய்தார். உலகமாதா அவர்தவத்தால் திருப்தியடைந்து துளசி வனத்தில் குழந்தைவடிவாய்த் தோன்றினள். குழந்தைநாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தது. மார்க்கண்டேயருக்கு மகாவிஷ்ணுவை மருமகனாக அடையவிருப்பம். மகாவிஷ்ணு, கிழப்பிராமணன் வேஷம் பூண்டு தள்ளாடிக்கொண்டு ரிஷியின் அருகில்வந்தார். மார்க்கண்டேயர் அவரை பாத்யம்அர்க்யம் முதலியவைகளால் உபசரித்தார். கிழவர் தனக்கு சந்தானசம்பத்தில் ஆசையிருந்திருப்பதால் "உன்கன்னிகையை எனக்கு தானம் செய்" என்று கேட்டார். மார்க்கண்டேயர் தன்மகளிடம் தெரியப்படுத்தினார். "நான் நாருயணனை வரித்திருக்கிறேன், என்விதிப்படியே ஆகட்டும்" என்று சொன்னாள். விவாகம் சாஸ்திரப்படி நடைபெற்றது. மகரிஷி "தங்கள் குமாரி வாலிபம் என்று தாங்கள் சொன்னபடியால் அவள் எப்படிபாகம் செய்தாலும் பொறுத்திருப்பேன்" என அனுக்கிரஹிக்க தற்காலத்திலும் லவணமில்லாமலே பிரசாதங்கள் நிவேதனமாகி வருகின்றன. அலவணேசுவரர் என்றும் பெயர் அவருக்கு வழங்குகிறது.

## 3 ருத்திராட்சவனம் (தாராசுரம்.)

பரமசிவனால் கும்பகோணத்துக்கு ஒருமைல்தூரத்தில் மேற்கில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தலம். பூவுலகத்தினருக்கு அருள்செய்ய பரமசிவன் மரத்

நடியில் வசிக்கிறா. 33 கோடிதேவர்கள், அஷ்டவசுக்கள், 12 சூரியர்கள் பிரும்மா முதலிய மூர்த்தி இம்மாதநின் இலை, கிளை வேர்களாக இருக்கிறார்கள். முனிவர்களால் சபிக்கப்பட்ட இயமன் பரமசிவனுடைய சூலத்தால் ஏற்பட்ட தீர்த்தத்தை புதிப்பிவித்தான். தேவர்களை வருவித்தான். ஆவணி மாதம் அமாவாசையன்று தான் புதிப்பித்த தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுக்கும்படி செய்தான். பதினாயிரம் வருஷம் தவம் செய்து சாபவிமோசனத்தை அடைந்தான். விசுவகர்மாவினால் பட்டணத்தை அமைத்தான் முடிவில் முக்தியடைந்தான்.

## இத்தலத்தில் அன்னதானம் விசேஷம்.

பிரும்மஹத்திதோஷத்தால் பீடிக்கப்பட்ட சூரசேனனென்னும் பிராமணனென்ன, சித்தப்பிரமையடைந்த யஞ்ஞியன் என்னும் சாது பிராமணனென்ன, குருபத்னியின் கற்பைக்கெடுத்த சுபுண்ணியன் என்கிற பிராமணனென்ன, மதுபானம் செய்த சூர்யனென்ன, இவர்கள் தாங்கள் செய்த அன்னதானத்தினால், மேற்கூறிய பாதகத்தினின்றும் விடுதலை அடைந்தார்கள். துர்வாசமகருஷியின் சாபத்தால் வெண்மை நிறத்தை யிழந்த இந்திரனது ஐராவதம் இயமதீர்த்தஸ்நானத்தால் தன் நிறத்தைமீண்டும் அடைந்தது. ஐராவதம் பூஜித்ததால் இத்தலத்தின் ஈசனுக்கு ஐராவதேசுவரன் என்று பெயர் வழங்குகிறது. தாரன் என்னும் ஓர் அசுரன் ஐராவதீசனை பூஜித்து சாவில்லாவரனைப்பெற்றனன். அவனுடைய நூறுபிள்ளைகளும் சிவஸாயுஜ்ய பதவியை அடைந்தார்கள். தாரன் பூஜைசெய்த க்ஷேத்திரமாகையால் தாரேசுவரம் என்றும் பெயர். அவன் மகன் மேகதாரன் வைகாசி மாதத்தில் உற்சவம் செய்து அத்தலத்திலேயே வசிக்கிறான். இவ்வூரில் அன்னதான விசேஷத்தையறிந்த தஞ்சை மஹாராஜாக்கள் சத்திரம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

175898

## 4 சுவாமிமலை

---

வாயுமூலையில் கும்பகோணத்தின் ஒரு குரோசதூரத்திலுள்ள ஓர் தலம் உண்டு. அதுதான் சுவாமிமலை. அம்மலையின் படிக்கட்டுகள் பிரபவாதி வருஷதேவதைகள். இருது தேவதைகள் நாற்புறமும் அங்கு வசிக்கிறார்கள். மேற்கூறிய தேவதைகளை பூஜித்து, சுவாமிநாதக்கடவுளை வணங்கி, பின்பு மூலன பரமசிவனை பூஜைசெய்யவேண்டும். நினைத்தகாரியங்கள் கைகூடுகின்றன. கார்த்திகைமீ பௌர்ணமியன்று சுவாமிநாதனை தரிசிப்பது சித்திரைமீ கிருஷ்ணபக்ஷத்தில் அங்கப்பிரதக்ஷிணம், தைமீ பூசத்தில் குமார தீர்த்தத்தில் ஸ்நானம், இவைகள் நினைத்தகாரியங்களை சித்திக்கும்படி

செய்கின்றன. சிவத்துரோஹியாகிய கேகயநாட்டரசன், ரோப்பிணியை அடைந்து, ஜாபாலியின் உபதேசத்தால் பூசத்தில்ஸ்நானம் செய்து அந்நோய் விலகப்பெற்றனன். கோவிலுக்கு திருப்பணிசெய்தான். பூஷணங்களைசெய்வித்தான். இங்கு அங்கபிரதக்ஷிணம் விசேஷம். கலியில்கைகண்டதெய்வம் சுவாமிநாதனே! ரோப்பிணி தீர்ந்ததால் சதிர்மீன் கிருஷ்ணஸ்வாமிஅய்யர் அவர்கள் இங்கு ஓர் அன்னசத்திரம் ஏற்படுத்தியிருக்கிறார் !!

## 5 பாடலவனம் (கருப்பூர்.)

இது கும்பகோணத்துக்கு ஈசான்னியத்தில் உள்ளஸ்தலம். தேவர்கள் பரமசிவனை சுந்தரேசன் என்று துதித்தார்கள்.

சுவர்ணரோமன் அகத்தியர் ஆஞ்ஞைப்படி உமாபதியை பூஜித்து நற்கதியடைந்தான். காலகில்லியர் சித்திரைமீ பௌர்ணமியில் ஈசனை பூஜித்து சாயுஜ்ய பதவி அடைந்தவிடம் இதுவே. வேந்தன் சூரசேனன், குபேரன், இருவர்களும் சிவபூஜைசெய்தஸ்தலம் இதுதான். வங்கநாட்டரசன் சுவர்ணரோமன் என்னும் புத்திரனை அடைந்தது இத்தலத்தில்தான். இங்குள்ள புண்ணிய தீர்த்தம் பிரும்ம தீர்த்தம்

இத்தீர்த்தத்திற்கு தென்பக்கம் புன்னைவிருக்ஷக்காட்டில் காலவஇருஷிக்கு தரிசனமளித்த வெங்கிடேசபெருமான் பூமி நீலாஸமேதராய் இருக்கிறார். இவரை தரிசிப்பவர்கள் பஞ்சக்குரோசபலனை உடனே அடைகிறார்கள்

## மகாமகம்.

மகாமகம் என்பது என்ன? அது ஒரு புண்ணியகாலம். அது எப்பொழுது வருகிறது. பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை வருகிறது. ஒவ்வொரு வருஷம் மாசிமாதத்தில் மகநக்ஷத்திரம் கூடியசுபதினம் மகோற்சவதினம் எனப்படும். 12-வருஷத்திற்கொருமுறை குரு சிங்கராசியில் வருவார். சந்திரன் குருவுடன் சேருவார். சூரியன் கும்பராசியிலிருப்பார். அப்புண்ணியகாலம்மகாமகம் என்று சொல்லப்படுகிறது. இதை தென்னிந்தியா கும்பமேலா என்றே சொல்லவேண்டும்.

ஒவ்வொரு புண்ணியகாலத்தில் கங்கை வருவதாக ஐதீகம். கங்கை இமயமலையில் உற்பத்தியாகி புண்ணியபூமியாகிய இந்து ஸ்தானத்தின்வழியாக ஓடுகிறது. மூன்று லோகங்களிலும் ஓடுவதால் திரிபதகை என்றும் பகீரதனால்கொண்டுவரப்பட்டதால் பாகீரதீ என்றும், ஜன்னுமஹரிஷியின் காதின்வழியாக வந்ததால் ஜான்ஹவி என்றும் அழைக்கப்படுகிறாள், சகர

குமாரர்களுக்கு சுவர்க்கத்தை அளித்து உலகத்தின் பாவத்தைப்போக்க வந்த இப்புண்ணியநதியின் வைபவமே வைபவம்!!!

## காவேரி

இப்புண்ணிய நதி அகத்தியமாமுனியால் தக்ஷிணதேசத்துக்கு கொண்டுவரப்பட்டது. கலியுகத்தில் மூன்று இடங்களில் காவேரிஸ்நானம் கிடைப்பதரிது அவ்விடங்களாவன ஸ்ரீரங்கம், கும்பகோணம், சங்கமுகம் காவேரியின், மகிமையை புராணம் பின்வருமாறு கூறுகின்றது.

காவேரீ தோயமாச்ரித்ய வாதோயத்ர ப்ரவர்த்ததே!
தத்தேசவாஸிநாம் முக்திஹி ஜந்தத்ர வாஸிநாம்!!


காவேரிஜலத்தில் பட்டகாற்றுகள்வீசும் இடங்களிலிருப்போர்களை வருக்கும் முக்தி ஏற்படுகிறது. அத்தீரத்திலுள்ளவர்களைப்பற்றி கேட்பானேன். பாவங்களைப்போக்கி இஷ்டகாமியங்களை கொடுக்கும், தக்ஷிண கங்கையன்றோ காவேரி?

## மகாமக தீர்த்தம்.

முற்காலத்தில் தீர்த்ததேவதைகளாகிய ஒன்பதின்மரும்பரமசிவனிடம் சென்று "சர்வேசா எல்லோரும் தங்கள் பாபங்களைப்போக்க எங்களிடம் நீராடுகிறார்கள் அப்பாபச்சுமைகளை நாங்கள் போக்குவதெப்படி. தயவு செய்து உபாயம் சொல்லுங்கள் "என்று பிரார்த்தித்தார்கள்" உமாபதி அவர்களை கும்பகோணத்தில் மகாமக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும்படி கட்டளையிட்டார் அத்தலமிருக்குமிடம் தெரியாதென்று நவகன்னியர்கள் சொல்ல சிவபிரான் அவர்களை காசி க்ஷேத்திரத்துக்கு போகும்படி உத்திரவு பண்ணினார் கைலாஸாதிபதியும் பிரமத கணங்களோடும் கன்னிகைகளுடனும் கும்பகோணம்போய் சேர்ந்தார்கள் அனைவரும் அமுதஸரஸை கண்டார்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள் கிழக்குமுகமாக இருந்த அபிமுக நாதர் மேற்குமுகமாக திரும்பினார். கௌதமேசர், அபிமுகநாதர் விசுவேசுவரர் இவர்களை பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து நீராடியபின் தடாகத்துக்கு எதிர்முகமாக கன்னியர்கள் விசுவநாதர் கோவிலில் வீற்றிருக்கிறார்கள்

தவிர, ஒன்பது தீர்த்ததேவதைகளும், தங்கள் பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கி அவற்றில் நீராடுவோர்க்கு அளவற்ற புண்ணியத்தை கொடுக்கிறார்கள். அஷ்டதிக்கு பாலகர்கள் தங்கள் பெயராலும் தீர்த்தம் ஏற்படுத்திக்கொண்டார்கள். பிரமன் தன்பெயரால் ஒரு தீர்த்தம் வடதிசையில் உண்டாக்கினார்.

# மாமாங்க குளம்.




## தீர்த்தங்களின் மகிமை.

அறுபத்தாறுகோடி தீர்த்தங்கள். கொடிய மகாபாதகங்களை துலைப்பதற்கு அமைத்திருக்கின்றன.

இந்திர தீர்த்தம் தேவலோகத்தை, அளிக்கும். அக்னி தீர்த்தம், பாவத்தைக்கொளுத்தும், இயம தீர்த்தம் இயமபடாளுடைய துன்பத்தை தவிர்த்துவிடும். நிருருதி தீர்த்தம் பூதப்பிரேதபிசாசங்களை விரட்டிவிடும் புத்தியையும், சாயுஜ்யபதவியையும் தரும். வாயு தீர்த்தம் துன்பத்தைப் போக்கும். பிரம தீர்த்தம் நூற்றொருகுலமுறையிலுள்ள துன்பங்களைப் போக்கும்.

மகாமக தீர்த்தம் மூன்றுகோடி தலை முறையவரை கரையேற்றிவிடும். பிரதி தினம் கன்னியாதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் மூன்று தப்தகிருச்சிரபலனை அடையலாம். மோக்ஷஸாம்ராஜ்யம் ஏற்படுகிறது. நினைத்த காரியங்கள் கைகூடும். பாவத்தை பஸ்மஞ்செய்யும், ஈசான தீர்த்தம். கங்கை கைலாசத்தைக்கொடுக்கும். மகாமக தீர்த்தம் பதினாயிரம் கங்காஸ்நாநபலனை ஒருமிக்கக்கொடுக்கும். யமுனை பொன்னை கொடுக்கும் கோதாவரி கல்பகவிருக்ஷம்போல் எண்ணினவையெல்லாங்கொடுக்கும். நர்மதை பாவமலைகளுக்கு வஜ்ராயுதம். சரஸ்வதி தத்துவஞானத்தையும் வைராக்கியத்தையும் தரும். பாவத்தைஒழிப்பவள் காவிரி, புருஷார்த்தங்களையும் கொடுப்பாள். கன்னியா குமாரி பதினாயிரம் அசுவமேதஞ்செய்த பலனை கொடுக்கும். காமதேனுவிருக்கும் உலகத்தை அளிக்கும் பாலாறு. சரயூநதி த்துன்பங்களைத் தவிர்த்துவிடும். 66 கோடி தீர்த்தங்களும் சர்வதீர்த்தங்களின் பிரயோஜனங்களைக்கொடுக்கும்.

## மகாமகதீர்த்தத்தின் மகிமை.

175898
175898

இம்மகாமக தீர்த்தம் புருஷர்களுக்கும் விசேஷமாகப் பெண்டிர்களுக்கும் நினைத்தபயன்களை யெல்லாம் கொடுக்கத்தக்கது

மூன்று விதமலடிகளும்—காகவந்தியா, கதளீவந்தியா, மிருதவந்தியா.- இல்லற சுகத்தையும், புத்திரர்களையுமடைய, ஒன்பதுகன்னியர்களுக்கு அபிஷேகம், நிவேதனம், சந்தனம், தாம்பூலம், உற்சவம் முதலானவைகளைச்செய்தபின், ஒன்பது சுமங்கலிகளுக்கு எண்ணெய், சந்தனம், குங்குமம், புஷ்பம் கொடுத்து நல்லவிருந்தளிக்கவேண்டும். கோவிலுக்குச்சென்று நூறு தீபம்வைக்கவேண்டும். இவ்வாறு நான்கு வெள்ளிக்கிழமை, கார்த்திகை சோமவாரம், நவராத்திரி, தனுர்மாதம். இச்சமயங்களில் ஆராதித்தால் மக்கட்பேறு உண்டாகுமென்பதற்கையமில்லை !!

வெகுகாலம் புஷ்பவதியாகாத பெண்கள் மகாமகபெண்களுக்கு பூஜை படைத்தலால் புஷ்பவதிகளாகி கணவர்களுடைய பிரியத்தை அடைகிறார்கள்.

நல்ல புத்திரனை அடைய விருப்பமுள்ளவன் மாசிமாதத்தில் ஓர் நாளில் ஐந்துதரம் ஸ்நாநம்செய்து, அர்க்யம்கொடுத்து பிராமணர்களுக்கு நல்ல பழங்களை தானம் செய்தபின் மறுபடிஸ்நாநம் செய்யவேண்டும்

இத்தீர்த்தத்தில் நீராடுகிறவன் தனது எழுகுலங்களை பரிசுத்தமாக்கிக்கொள்ளுகிறான். அவைகளாவன: 1. தன்குலம்; 2 தன்பெண்ணைக்கொண்டவன் குலம்; 3. தாயின் குலம்; 4. சிறியதாயின் குலம்;

5. உடன்பிறந்தாள் குலம்; 6. தந்தையோடு பிறந்தவள் குலம்; 7. தன் மாமன் குலம்;

எல்லா புருஷார்த்தங்களை கொடுக்கும் தீர்த்தமிதுவே. எல்லாயாக பலன்களையும் கொடுக்கும் தீர்த்தம் இதுவே. இதை ஒருதரம் பிரதக்ஷிணம் செய்தால் மேருவைச்சுற்றி நூறுதரம் பூமியைச்சுற்றும் பலன் ஏற்படுகிறது.

## மகாமகஸ்நான விருத நியமம்.

---

இவ்விரதம் ஐந்துநாள் பின்வருமாறு அனுஷ்டிக்கவேண்டும்.

முதல்நாள்:—பிரும்மசாரி கிருஹஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி எவராயிருந்தாலும் சரி கன்னியாதீர்த்தத்தில் ஸ்நானம்செய்யவேணும், பிறகு-புண்ணியாகவாசனம், புரோக்ஷணம், ஆசமனம், பஞ்சகவ்வியம் உண்ணல், பிராமணசமாராதனை, தலபுராணத்தை பக்தியுடன் தெரிந்து கொள்ளல், குருபூஜை, ஒருவேளைபுசித்தல், தரையில் படுத்துறங்குதல் இவைகளைச்செய்யவேண்டும்.

இரண்டாவது நாள்:—பிராதஸ்நானம், மாத்தியான்ஹிக ஸ்நானம், தேவதர்ப்பணம், அந்தணருக்கு அறுசுவையோடு கூடிய அன்னமளித்தல், ஏகவாரபோஜனம், தரையில் படுத்தல் இவைகளை அனுஷ்டிக்கவேணும்.

மூன்றாவது நாள்:—கன்னியா தீர்த்தஸ்நானம், தீர்த்ததேவதைகளை பிரார்த்தித்து அனுமதிபெற்றுக்கொள்ளல், நவகன்னியர்கள் பூஜை, அசுவத்த பிரதக்ஷிணம். பொன், வெள்ளி, முறங்களில் வைக்கப்பட்ட சந்தனம், குங்குமம், பாக்குவெற்றிலை, ரவிக்கை. இவைகளை தீர்த்தமத்தியில் போட்டு நீராடுதல், ஒன்பது கன்னிகைகளுக்கு ரவிக்கை, குங்குமம் முதலியது கொடுத்தல், அவர்களுக்கு அன்னமளித்தல், பிறகு பிராம்மணபோஜனம், சாரங்கபாணி, கும்பேசுவரர், சக்கரபாணி இவர்களுடைய ஆலயத்துக்குட்சென்று பிரதக்ஷிணநமஸ்காரம் செய்தல், ஒரு வேளைசாப்பாட்டுடன் கீழேபடுத்துறங்கல். இவைகளனைத்தையும் செய்யவேணும்.

நான்காவது நாள்:—பிதுர்தேவதைகளை உத்தேசித்து சங்கல்பம், தலைமட்டும் க்ஷவரம், பொன்தானம், பால். பழம் உண்ணல். இவ்விதம் செய்யவேணும்.

ஐந்தாவது நாள்:—பிதுர்தேவதைகளுக்கு பிண்டம் கொடுத்து மகாமகதீர்த்தஸ்நானத்துக்கு அங்கமாகிய தீர்த்தசிரார்த்தம் செய்தல்.

மேலேசொல்லியபடி நான்குநாள் நியமப்படிஸ்நானம்செய்து ஐந்தாவதுநாள் தீர்த்தசிராத்தம் செய்து வீடுசேர்ந்து பிராம்மணசமாராதனைசெய்து விரதசமாப்திசெய்கிறவன் இகத்தில் புத்திரமித்திர களத்திரர்களுடன் அஷ்டை சுவரியத்தையும், ஞானவைராக்கியத்தையும் அடைகிறான். பரத்தில்கைவல்லியத்தை அடைகிறான்.

நவகன்னியர்களுக்கு பூஜையும், அர்ச்சனையும் செய்யவேண்டும்.

பதினாறுபிராம்மணர்களுக்கு பதினாறு விதப்பழங்களை தானம்செய்து, வஸ்திரம், பொன், பசுமுதலிய இதரதானங்களை தன்சக்திக்குஇயன்றவாறு செய்யவேண்டும்

குறிப்பு :—சுதிரவன் கும்பத்திலும், பிருஹஸ்பதி சந்திரன் இருவர்களும் ஸிம்ஹத்தில் இருக்குங்கால் பதினான்கு, உலோகங்களிலும் தேவர்களால் நிருமிக்கப்பட்டதும், சகல பாவங்களை போக்கக்கூடிய தீர்த்தம் இக்கன்னியா தீர்த்தத்தோடு சேருகிறபடியால், வேறு க்ஷேத்திரங்களில் செய்த தானதருமங்கள் பலனை அடையா. பிருமன்தேவர்கள், முதலியவர்களுடைய கவனம் மகாமக ஸ்நானத்தைக்குறித்து ஒரு வருஷம் முந்தியே ஏற்படுவதால், அவ்வருஷம் சவுளம், உபநயனம், விவாகம், முதலிய கல்யாணங்களும், கிணறு சோலை, மண்டபம் உண்டாக்கலும், நெய், கோ முதலிய தானங்களும், யாத்திரையும் கூடாதென்று விலக்கியிருக்கிறார்கள்.

## நீராடுவதனால் போகும் பாவங்கள்,

மகாமக உற்சவத்தின் கடைசிநாளில் எல்லா தீர்த்த தேவதைகளும் ஒன்று சேர்ந்து அவபிருத ஸ்நானத்திற்காக வருகிறார்கள். ஆங்குள்ள தேவர்களும் அவர்களோடு கலக்கிறார்கள். சகல பாவங்களும் நாசமடைகின்றன. பிரும்மஹத்தி தோஷம், கட்குடித்தல், திருடல், குருதுரோஹம், சிவதுரோஹம், விஷ்ணு துரோஹம், பரஸ்திரீ கமனம், சிவசொத்தை கொள்ளையடித்தல், ஸ்திரீ புருஷர்களுக்கு விரோதம் உண்டுபண்ணுதல, சிராத்தத்தை விடுதல் இத்தகைய பாபங்கள், மகாமகத்தில் கன்னியா தீர்த்தத்தில் மூழுகுவதால், பறந்தோடுகின்றன.

மாசிமாதம் பிதுர்க்களுக்கு மாகதீர்த்தத்தில் திலதர்ப்பணம் செய்கிறவன் கோடிகயாசிராத்தபலனை அடைகிறான். தவிர தன்னைச்சேர்ந்த ஏழுகுலங்களையும் மகாபாதகங்களிலிருந்து கரைசேர்க்கிறான். இரண்ணியகிருத்தம், விருஷபோத்ஸர்ஜனம் இவற்றை செய்கிறவன் தன்னைச்சேர்ந்த நூறு வம்சங்களையும் பாதகத்தினின்றும் கரைசேர்த்து, கங்கைகரையில் செய்த கோடிகயாசிராத்தபலனை அடைகிறான்.

கன்னியா தீர்த்தத்தில் பின்வரும் புண்ணியகாலங்களில் ஸ்நாநம் செய்து பிதிர்தர்ப்பணம் செய்யவேண்டியது; மாசிமாதம் மகம்; சித்திரை மாதம்; கார்த்திகை சோமவாரம்; அமாவாசியை; பௌர்ணிமை; சூரிய, சந்திர கிரகணம்; உத்தராயணம்; தக்ஷிணாயனம்; விஷு புண்ணியகாலம்; கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி; சிவராத்திரி, சுக்கிரவாரம்; கபிலசஷ்டி.

## மகாமக தீர்த்தத்தில் நீராடி நற்கதியை அடைந்தவர்களின் வரலாறு.

### 1 ஆஸ்தியின் கதை.

முன்னொருகாலத்தில் சௌராஷ்டிர தேசத்தில் சௌனக வம்சத்தில் உதித்த ஓர் பிராமணர் உண்டு. அவர் பெயர் வெங்கிடாசாரியார். அவர் நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் முதலியவைகளை நன்றாய் அப்பியாசம் செய்தார். சுசீலன் என்னும் ஓர் புத்திரனைப் பெற்றார். இளமையிற்கல் என்னும் நியாயப்படி, அவர் தன் புதல்வனுக்கு எல்லா ஞானப்பூலையும் வாலிபத்திலேயே ஊட்டினர். தன் தநயனுக்கு விவாகத்தையும் முடித்து வைத்தார். காலக்கிரமத்தில் வயது முதிர்ந்த சுசீலனின் பிதா மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் ஏகினர். பதியே கதி என்றும், ஸககமனம் செய்வோர், அருந்ததிக்கு ஒப்பாவார், என்றும் கருத்துகொண்ட சுசீலனின் தாய் அநுமரணம் செய்தாள். பெற்றோர்களுக்குச் செய்யவேண்டிய உத்தரக்கிரியைகளை வெகு சிரத்தையுடன் சுசீலன் செய்து முடித்தான். தன் வீட்டைத் தேடி வந்தவர்களுக்கு, மிக உபசாரத்துடன் அன்னம் அளிப்பான். வேதங்கள், சாஸ்திரங்கள் இவைகளை ஓதிக்கொண்டு தன் காலத்தைப் போக்குவான்.

இப்படியிருக்கையில் தெய்வ வசத்தினால் அவனுக்கு வாய்த்த பெண்சாதி ஒரு துர்க்குணி. சதா முணுமுணுத்துக்கொண்டேயிருப்பாள். இவள் சகலன் என்னும் ஒரு துஷ்ட பிராமணனின் புத்திரி. பெற்றோர்களின் கெட்ட குணங்களை இவள் குட்டையில் ஊறின மட்டைபோல், சீக்கிரத்தில் பிடித்துக்கொண்டாள். ஒரு சமயத்தில் அவளுடைய தாய் தகப்பன், ஓர் கானகத்தின் வழியாய்ச் செல்லுகையில் இடிக்கிரையானார்கள். அங்ஙனம் பெற்றோரையிழந்த இக்குழந்தை, கம்பில நகரத்தில் ஓர் குழந்தையில்லாத செல்வ பிராமணனுடைய வீட்டை அடைந்தது. வாலிபத்தில் வெகு லாலனையாக வளர்க்கப்பட்ட இப்புதல்வி, சுசீலனுக்கு பாரியையாக ஆனாள்.

நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததுபோல், இவள் இவனுக்கு வாய்த்தாள். புருஷனைக்கண்டு தலைவலி, வயிற்றுவலி என்று பாசாங்கு செய்

வன். இவளிடத்தில் பதித்ரோஹம், பதிவிரதை இவ்விரண்டும் குடிகொண்டிருந்தன. ஆகவே சுசீலனுக்கு வீடு நரகமாகிவிட்டது. கண்களும் அவிந்து போய்விட்டன. வெகு கஷ்டப்பட்டு, பித்தபாண்டு நோய்க்கிறையாகி, யமனுலகம் போய்ச் சேர்ந்தான்.

சுசீலன் கெட்ட மனைவியுடன் 50 வருஷங்களுக்கு மேல் இருந்தபடியால் பதினாயிரம் வருஷங்கள் நரகத்திலிருந்தான். பிறகுதான் செய்த புண்ணியத்தால் காசிராஜாவுக்கு புதல்வனாய்ப் பிறந்து வசிஷ்ட மஹாரிஷியினிடம் பிரும்மரிஷி யென்கிற பட்டத்தைப் பெற்றான்.

கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறாமல், சுசீலனின் மனைவி அன்னிய புருஷர்களுடன் சுகித்து வருங்கால், நாளொன்று ஒரு இராவு ஸர்ப்பத்தால் தீண்டப்பட்டு இறந்தாள். ரௌரவாதி நரகவாஸங்களுக்குப் பிறகு கோதாவரீ தீரத்தில் பிரும்மேசுவரர் ஆலயத்தில் பணிவிடை செய்து வரும், ஸுபிரபா என்னும் தேவதாஸியின் குமாரியாக பிறந்தாள். மூத்ர கிருச்சிரம் என்னும் வியாதியால் பீடிக்கப்பட்டாள். துர்கந்தத்தினால் எல்லாராலும் இகழப்பட்டாள்.

இப்படி யிருக்கையில் யாத்திரிகர்களின் கூட்டங்கள் சம்போசங்கரா என்றும், பஜகோவிந்தம் என்றும், பஜனை செய்துகொண்டு மகாமகஸ்நான விசேஷத்தை சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இக்கணிகையின் மீது பரிதாபங்கொண்டு கும்பகோண ஸ்நானத்துக்கு வரும்படி சொன்னார்கள்.

போகும் வழியில் நல்ல உபதேசம் செய்தார்கள். மகாமக தீர்த்தத்தை பிரதக்ஷிணம் செய்தாள். பிரம்மதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினாள். பிறகு கன்னியா தீர்த்தத்தில் நீராடினாள். பஞ்சக்குரோச யாத்திரை செய்தாள். காசி விசுவேசுவரரையும், ஆதி கும்பேசுவரரையும் நவகன்னியர்களையும் அர்ச்சித்தாள். நோய் நொடிப்பொழுதில் நீங்கியது; சௌந்தர்யம் மீண்டும் வந்தது! சகல சம்பத்துக்களுடனும் சுகமாயிருந்தாள். கடைசியில் கைலாஸம் போய்ச் சேர்ந்தாள்.

ஓர் மகாமகஸ்நானத்தினாலல்லவா இக்கணிகைக்கு நோய் நீங்கி இப்பேரானந்தம் வந்தது! மகாமக ஸ்நான வைபவமே வைபவம்!!

## கிருதவீரியன் ஆறு குமாரர்களையடைந்த கதை.

வெகுகாலத்துக்குமுன் ஹேஹயன் என்று ஒரு அரசனிருந்தான். அவன் பூதேவியைப்போல் சாந்தன். அழகில்சோமன். விஷ்ணுபக்தன்

அவனுக்கு மனைவிகள் ஆறுபேர். பட்டமகிஷியின் பெயர் சோபனாங்கி, பதியின்பணிவிடையே பெரிதெனக்கொண்டவள். ரதிபோல் அழகுள்ளவள். பதியின் ஆயுள்விருத்திக்காக சண்டிகாதேவியை உபாசித்தாள். கணவனின் ஜயத்தைக்குறித்து ஆதித்தியனை ஆராதித்தாள். தெய்வபக்தி பிராம்மண விசுவாசமுள்ளவள்.

இவர்கள் அனைவரும் சுகமாய் காலத்தைகழித்து வந்தார்கள். பிள்ளையில்லாத்துயரமே இவர்களுக்கு பெருந்துயரமாயிற்று. அரமனைவாயிலில் கூலிவேலைசெய்யும் ஓர்சூத்திரன் காணாமல்போன தன்சொரூபியான புதல்வனை கண்டடைந்த சந்தோஷத்தையும் அவனது இனிய சொற்களையும் கேட்ட ராஜதம்பதிகளுக்கு அதிகத்துயரம் உண்டாயிற்று. அரசன்தன் ஜன்மத்தை வெறுத்தான். உதடுஅசைந்தால் ஊர்அசையும். தலையசைந்தால் தரணிஅசையும். நாக்கசைந்தால் நாடுஅசையும். இப்பேர்ப்பட்ட ராஜ்யமிருந்தும் யாதுபயன்! பிள்ளையில்லாத மகா பாவியானேனே! பிதுருதேவதைகள் மிகவும் வருந்துகிறார்கள். புத்என்னும் நரகத்திலிருந்து காப்பாற்ற புதல்வனில்லாவிடில் அந்த நரகத்தைவிட்டு நீங்கி சுவர்க்கத்தையடைய மார்க்கம்எது? பிள்ளை யில்லாதவனுடைய முகத்தைப் பார்த்தால் உடனே அப்பாவம்நீங்க சூரியனைப் பார்க்கவேணும். ஐயோகடும்பாவியாய் விட்டேன்என்று துக்கசாகரத்திலும் வைராக்கிய சாகரத்திலும் மூழ்கிதத்தளித்தான். ராஜ்யவேலையில் கவனத்தை விட்டான்.

இப்படியிருக்குங்கால் சரசுவதிநதிக் கரையில்தான் நடத்த உத்தேசித்திருக்கும் யாகதக்ஷிணைக்காக சாகல்ய மகரிஷி அரசனிடம்வந்தார். மிக்க வினயத்துடன் ராஜா உபசரித்தார். பிள்ளையில்லாக் குறையை தெரியப்படுத்தினார். மகரிஷி மனமிறங்கி பின்வருமாறு சொன்னார். "அரசே, நீபூர்வ ஜன்மத்தில் ஓர் வியாபாரி ஒன்றுக்கு ஒன்பதுசொல்லி லாபம் சம்பாதித்தீர். அக்கிரமவட்டி வாங்கினீர். வாழைப்பழத்தை தின்றுவிட்ட ஓர் பூனையைக்கொன்றீர். ஸ்ரீசைலத்தில் ஓர் மண்டபம் அமைத்ததால், மகா பாவியாயினும், நீர் தற்காலம் ராஜபதவியிலிருக்கிறீர். மேற்கூறிய பாவங்கள்போக ஓர் உபாயமுண்டு. கும்பகோண க்ஷேத்திரம்போய் ஆறுமாதத்திற்கப்பால் வரும் மகாமகத்தில் விதிப்படிஸ்நானம்; நவரத்தினத்தால் இழைக்கப்பட்ட பூனைதானம்; இலுப்பசட்டியில்நெய்ஊற்றி நிழலைப் பார்த்துவிட்டு தானம்; மாதுளம் முத்துகளை தங்கத்தட்டில் பட்டுவஸ்திரம் போட்டு மூடி தானம்; மாகமக உற்சவத்தில் பக்திசிரத்தையுடன் உழைத்தல் இவைகளைச் செய்தால் பாவம்பறந்தோடிவிடும் புதல்வன் உண்டாவான்"

இவ்வனம் முனி வசனத்தைகேட்ட அரசன் சாகல்யருடைய யாகத்தைநிறைவேற்றி அவருடன் கும்பகோணம்போய்ச் சேர்ந்தவுடன், மகரிஷி

சொன்னபிரகாரம் ஸ்நானம், தானம், ஈசுவரதரிசனம், அன்னதானம், இவைகளைச் செய்தான். கும்பேசுவருடைய அருளால் ஆறு மனைவிகளும் கர்ப்பவதியரானார்கள். ஆறு குமாரர்கள் பிறந்தார்கள். சோபனாங்கி கார்த்தவீரியார்ச்சுனனைப் பெற்றனள். அரசன் கும்பேசுவருக்கு மானியம் விட்டான். பிராம்மணர்களுக்கு தானம்செய்தான்,

கிருதவீரியனுக்கு புத்திரனைக் கொடுத்த கல்பகவிருக்ஷம் மகாமக ஸ்நானமன்றோ!!

## 3 சுதன்மன் பாவம்நீங்கி பின்புதல்வனை அடைந்த கதை.

---

தென்னாட்டிலேதாம்பிரபர்ணி தீரத்தில், கௌண்டின்ய கோத்திரத்தில் சதுர், சகலச்ருதி, ஸ்மிருதி, இதிகாஸம் இவைகளை அறிந்த தேவசர்மா என்ற ஓர் பிராம்மணன் இருந்தான். அவனுக்கு ஓர் மகன் உண்டு சுதன்மன் என்பது அவர்பெயர். சகலசாஸ்திரஸம் பன்னர். வாக்கு வன்மைமிகுதி குபேர சம்பத்தும் பூமியும்உண்டு. பரமபக்தர். யாகங்கள் செய்தார்.

சரஸ்வதிகடாட்சம், லக்ஷ்மீகடாக்ஷம் பொருந்திய இந்த சுதன்மனுக்கு இல்லற சுகம்இல்லாமல், போய்விட்டது. நான்குதடவை மணந்தபத்னிகள் அனைவரும் நமனுலகம் போனார்கள் ஐயோ! கலியாணம் கல்லெடுப்பாகி விட்டதே!

இப்படியிருக்கையில் விசித்திராங்கி என்னும் ஐந்தாவது பாரியையை மணந்தார். அவள்பெற்ற குழந்தைகள் பதினெட்டு, பெற்றதல்லாம் பிள்ளையாமா? அனைத்தும்மறித்துப்போய்விட்டன.

சுதன்மன் வைராக்கியம்வந்து தானதருமங்களைச் செய்தார் சத்திரங்களைகட்டினார். எழைகளுக்கு அன்னமிட்டார், நாகப்பிரதிஷ்டை செய்தார் சேதுஸ்நானம் முதலிய புண்ணிய யாத்திரைசெய்தார். பொன்னுடையரேனும், புகழுடையரேனும், மற்றுநன்னுடைய ரேனும் உடையரோ.

பிள்ளையில்லா ஜன்மம் வீண்தானே. என்றுதன் சகல சொத்துக்களையும் மித்திர்சர்மா என்கிற சிநேகிதனிடம் ஒப்பிவித்து, ஈசன் கிருபையால் தநயன்உண்டாகும் வரையில், யாத்திரை செய்கிறதென்று பிரதிக்ஞை செய்தார். கண்டார்மார்க்கத்தில் அகத்திய மகாமுனிவரின் சிஷ்யரான த்திரிகால ஞானியாகிய குசிகரை.

அவர் சுதன்மனைப் பார்த்து பின்வருமாறு சொன்னார். "நீர் பூர்வ ஜன்மத்தில் யாசகம் வாங்கி கோபாலன் சோலை கட்டின வேதபுரியில் வசித்த பிராமணன். அதனால் பிராம்மண ஜன்மத்தை அடைந்தீர். அதற்கு முன் ஜன்மத்தில் குண்டின புரத்தில் ஓர் அந்தணராயிருந்தீர். உமக்கு 10 குமாரிகள் இருந்தார்கள்.

கன்னியா சுல்கத்தைப் பெற்று அவர்களில் ஒன்பது பேர்களை ஐம்பது வயது கிழவர்களுக்கு கொடுத்தீர் அவர்களின் யௌவனம் வீணாயிற்று சதா உம்மை திட்டினார்கள். அவர்கள் அனைவரும் தாம்பரபரணியில் விழுந்தும் விஷத்தை உண்டும் மாண்டார்கள். பத்தாவது பெண்மணியை ஒரு பிரும்மசாரிக்கு கன்னிகாதானம் செய்தபின் மருமகன் போட்ட நகைகளை அபஹரித்துக்கொண்டு அலங்காரமில்லாத பெண்ணை மருமகன் வீட்டுக்கு அனுப்பினீர். மேலும் தாம்பிரபரணி தீரத்திலுள்ள உத்தியான வனங்களிலுள்ள ஸ்ரீ நாராயணனுக்கு நிவேதனமாக இருந்த பழங்களை திருடினீர். தெய்வம் நின்று கேட்கும் ஆகையால் மேற்கூறிய பாபங்களால் உமக்கு வீடு சுடுகாடாகவும், குழந்தைகளில்லாமலும் ஆகிவிட்டது. இதற்கு விமோசனம் கன்னியா தீர்த்த ஸ்நானமே."

கும்பகோணத்துக்கு இங்ஙனம் குசிகன் கூறிய பின்னர் அவ்விருவரும் வந்தார்கள். விதிப்படி நீராடினார்கள். தானம் செய்தார்கள். சிவ விஷ்ணு தரிசனம் செய்தார்கள். குசிகர் இரும்புதானம் செய்தார் குஷ்டரோகம் நிவிருத்தியாகிவிட்டது. சுதன்மன் மாதுளம்பழ தானம் செய்தார். பிள்ளையை அடைந்தார். குசிகன் பாவத்தைப் போக்கினதும் சுதன்மனுக்கு புத்திரனை அளித்ததும் மகாமகஸ்நானமாகிய இக்காமதேனுவன்றோ!!

## 4 வீரசர்மா நரகத்தை பிளந்த பாபம் நீங்கிய கதை

---

நீர்வளம், நிலவளம் பொருந்திய கலிங்கதேசத்தில், அனேக வருஷங்களுக்கு முன் வீரசர்மா என்று ஓர் அரசனிருந்தான். சுமதி என்னும் அவனுடைய பத்னீ பதிவிரதா சிரோமணி. தெய்வவசத்தால் அவர்களுக்கு ஓர் அவலக்ஷணமான பிள்ளை பிறந்தது. அதற்கு தலை வழுக்கை கண் ஒன்று அது நபும்சகன்' ராஜதம்பதிகள் தீராத்துயரத்திலிருந்தார்கள்.

ஒரு நாள் சாண்டில்யமகாமுனி விஜயம்செய்தார். அரசனைப்பார்த்து பின்வருமாறு சொன்னார். "பூர்வ ஜன்மத்தில் நாகப்பிரதிஷ்டை செய்த கல்லைப்பிளந்து உமது அரண்மனைப் படிக்கட்டிற்கு உபயோகப்படுத்தினீர். ஆகையால் கோரரூபியான புத்திரன் உண்டாகியிருக்கிறான்" இக்கொடிய

பாவம் விமோசனமாக ஓர் உபாயம் உண்டு. மகாமகஸ்நானத்திற்கு கும்பகோணம்போய் விதிப்பிரகாரம் ஸ்நானம்செய்து திலம், ரத்தினம்—முதலிய தானங்களை செய்யும்" சாண்டில்யர் ஆஞ்ஞை பிரகாரம் ராஜா தானாதிகளைச் செய்தான். காலக்கிரமத்தில் வீரசர்மாவின் பாரியை அழகுள்ள ஓர் புதல்வனைப்பெற்றாள். தக்கவயது வந்தவுடன் தன் தனயனைபட்டத்தில்வைத்து, வீரசர்மா கும்பகோணம் வந்து ஆதிகும்பேசுவரர் ஆலயத்துக்கும், மகாமக குளத்திற்கும்-திருப்பணிவேலை செய்தான். நாகத்தை பிளந்தபாபம் பறந்தோடியது. எதனால், மகாமகஸ்நான சிந்தாமணியாலன்றோ !!

## 5. ஞானவானுக்கு பிதுர்ஹத்தி பாபம் நீங்கின கதை

அநேகவருஷங்களுக்குமுன் கொங்கணதேசத்திலே கடற்கரையோரத்தில் நான்குவேதம் ஆறுசாஸ்திரங்களை நன்குணர்ந்தவனும் வம்சரத்தினமாகிய யஞ்ஞசீலர் என்று ஒரு பிராமணர்இருந்தார். பதிவிரதாதர்மத்தை கைகொண்ட ஸம்பூர்ணலக்ஷணை என்கிற ஸ்திரீ இவருக்கு பத்னியானாள். இவர்களுக்கும் விருத்தாப்பியத்தில் ஞானவான் என்னும் ஓர் பிள்ளை பிறந்தது.

யஞ்ஞசீலர் முக்தியடைவதின் பொருட்டும், உலகக்ஷேமத்தின் பொருட்டும் 'கூர்மயாகம் செய்ய எண்ணங்கொண்டார். எல்லாசாமான்களும் சேகரிக்கப்பட்டன. தன்புத்திரனை கூப்பிட்டு "குழந்தாய்சமுத்திரதீரம் போய் (யத்கூர்ம) என்று சமுத்திரராஜனை பிரார்த்தித்துக்கேள். அவர் ஒரு ஆமையை அளிப்பார். அதை (மமகூர்ம) என்று சொல்லிக்கொண்டு துரிதத்தில் திரும்பியாகமண்டபத்துக்குவந்துவிடு. இடையூறுகளுக்கு அஞ்சாதே. காலதாமதம் பண்ணினால் உன்பெற்றோர்கள் இறந்து போய்விடுவார்கள்" என்று யஞ்ஞசீலர் சொன்னார். வெகுபக்தியுடன் ஞானவான் புறப்பட்டார். சமுத்திரராஜனைப்பிரார்த்தித்தார்.

ஐயோ'ச்ரேயாம்ஸிபஹூ ப விக்னானி'

நற்காரியங்களுக்கு இடையூறுகள் பல. ஞானவானைசோதிக்க மனதை கவரும்படியான பதினாறு வயதுள்ள ஓர் யுவதிவீணாகானம் செய்துகொண்டு வந்தாள். புன்சிரிப்பு சிரித்தாள். மனோஹரமானகானம் செய்தாள். மாயையின்வலையில் சிக்கிக்கொண்டான். விருத்தர்களாகிய பெற்றோர்களை மறந்தான்.

ஆசை அறுபது நாள் மோஹம் முப்பது நாள், ஞானவான்மெய்மறந்து அவளையே கவனித்துக்கொண்டிருந்தான். ஏழாவது தினத்தில் மாயை திடீ

சென்று மறைந்துவிட்டது. ஞானவான் பெற்றோர்களைப்பற்றி கவலைப்பட ஆரம்பித்தான். ஆமையை பெற்ற பிரும்மபத்திரத்தினால் மூடி வாயுவேகம் மனோவேகமாய் யாகசாலைக்கு வந்தான். எழுநாள் உபவாசத்தினால் யஞ்ஞசீலனும் அவர் மனைவியும் இறந்தார்கள். ருத்விக்குகள் பறந்தோடிவிட்டார்கள். ஞானவான் அபரக்கிரியைகளை செய்தபின் நைமிசாரண்ணியம் போனார். அங்கு சௌனகர் பின்வருமாறு ஞானவானைப்பார்த்து சொன்னார் நீ பூர்வஜன்மத்தில் ஒரு சூத்திரன். பணமமதை ஜாஸ்தி. கெட்டவிஷயங்களில் தரிதபுத்தியுள்ளவன். ஒரு சமயம் பசுக்களை பழைய கொட்டகையில்கட்டி, மழையில் அக்கட்டடங்கள் இடிந்துவிழ கோக்கள் இறந்தன. 20 பசுக்களை பிராம்மணர்களுக்குதானம் செய்தாய். அவர்களும். அவர்களுடைய பசுக்களும் தீக்கிரையானார்கள், ஆகையால் உனக்கு பிரும்மஹத்திதோஷம், கோஹத்திதோஷம் ஏற்பட்டு விட்டன. இப்பொழுது பித்ருஹத்திதோஷமும் வந்து விட்டது. கும்பகோணக்ஷேத்திரம்போய் ஒரு வருஷம் இருந்து மகாமகத்தில் கன்னியாதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து பிராம்மணபோஜனம் நடத்தி சிவவிஷ்ணுதரிசனம் செய்யவேணும். ஞானவான்பாரியையுடன்கூட கும்பகோணம்போனார். அங்கு ஒரு வருஷம் வசித்து பிதுருஹத்தி தோஷம்போய் 8 குமாரர்களை அடைந்து கடைசியாக பிரும்மத்தோடு ஸாயுஜ்யமடைந்தான். பிரும்மஹத்தி கோஹத்தி, பித்ருஹத்தி தோஷத்தைப்போக்கினது மகாமகஸ்நானசஞ்சீவியன்றோ?

சுபமஸ்து.

உ

ஸ்ரீ வெங்கிடாஜலபதிஸ்வாமி துணை.

Tel. Address: KRISHNA

**JEMBOO. R. S. KRISHNIER,**
**Silk & Cloth Merchant,**
*Birmankovil Street, Kumbakonam.*

எங்களிடம் முதல்தரமான ஜரிகை கொட்டடியில் பல கலர் சேலைகளும், அடமுந்தி இன்னும் விசித்திரமான வேலைப்பாடுள்ள சேலைகளும், பட்டு தினுசுகளில் பல தினுசுகளில் பல மாதிரியான சேலைகளும், லேஞ்சுகளும், மேல்கண்ட ரகங்களில், ரவிக்கை தினுசுகளும், சொரணுட்டுச் சேலைகளும், துகிலி, திருநாகேசுவரம் 60-நெம்பர் நூல்முதல் 200-நெம்பர் வரையில் ஜரிகை துப்பட்டாக்களும் இன்னும் பலமாதிரியான ரகங்களும் சொந்த நெசவில் சாயம் உறுதியாயும் தயாரிலிருக்கிறது. ஆர்டர்களை கவனித்து அனுப்பப்படும்.

ஜெம்பு. ரெ. சா. கிருஷ்ணய்யர்,
பட்டு & ஜவுளி வியாபாரம்,
பிரமன்கோவில் தெரு, கும்பகோணம்.

உ

குக சகாயம்.

ஆனதாண்டவபுரம்

## R. ஸ்ரீனிவாஸ அய்யர்,

ஜவுளி வியாபாரம்,

பெரிய தெரு, கும்பகோணம்.

---

பலவூர் நாணயமுள்ள ஜரிகை, பட்டுப்புடவை களும் வேஷ்டி தினுசுகளும் கிடைக்கும்

---

## பாரிஸ் ஹால்,

## இபுராயீம் ஈசாக் சேட் கம்பெனி,

சோமேஸ்வரன் சன்னதி, கும்பகோணம்

(and புதுச்சேரி.)

இவ்விடத்தில் அநேக விதமான நூதனமான சீட்டிகளும், பட்டுகளும். ஷர்ட்டிங் கோட்டிங் முதலியதுகளும், டுயிட், அல்பாக்கா, டசூர், சைனு, ஜப்பான், ஆசாம், இங்கிலிஷ், பிரஞ்சு, காஷ்மீர், கல்கத்தா, பர்மாய் பட்டுகளும். நூதன விசித்திர சாதா ஜரிகை, ஜப்பான் சேலைகளும், புதுச்சேரி ருமால், சேலை தாவணிகளும், பனீன்கள், வேஷ்டிகள், துவாலை, துண்டுகள், லாங்கிளாத், மல பீஸ்கள், காரிக்கம் பீஸ்கள், முதலியவைகளும், மல்சாஸ், ஜப்பான் பாய்களும், குடைகளும், பிரஞ்சு வாசனை பொருந்திய சென்டு, சோப்புகளும், இன்னும் அனேக தினுசுகளும், காஸ்லேட்களும் விலை சகாயமாய் விற்கப்படும்.

உ

ஸ்ரீராமஜயம்.

விலை ஸரஸம்! பெயர் பூண்ட உயர்ந்த ரகம்!!

# துயில் வேஷ்டி தினுசுகள்.

மேற்கண்ட வேஷ்டிகள் சொந்தத் தறிகளில் தயாராகி கெண்டையும், பட்டுக்கலர் துசோர்த்துவாங்கி முதலான வேலைமானங்களுடனும், பல கலர் பட்டுகளாலும் கெண்டைசீர், பட்டுசீர்களாலும் வேலை செய்யப்பட்டும் விற்பனைக்கு தயாராக இருக்கின்றன. சலவைசெய்தும் விற்கப்படுகின்றன மேலும் நீண்டகால அனுபவத்துடன் தயாரான கொல்லேகாலம் கெண்டை கொட்டடி, கெண்டை புட்டா, சாதாபட்டு உருமாலை தினுசுகளும் உயர்தர வேலை செய்த கொட்டடிமுதலான சேலைகளும், பங்களூர், காஞ்சிபுரம் முதலான பலவூர் சேலை தினுசுகளும் பட்டு ஜரிகை ரவிக்கைகளும், லொங்கிகளும், கண்டாங்கிகளும், வெண்பட்டுகளும் கல்கத்தாபட்டு தினுசுகளும் சிறந்தவேலைப்பாடாயும், நயமான விலையுள்ளதாயும் கிடைக்கும்.

வி. பி. மூலமாயும் அனுப்பப்படும்.

**T. V. சக்கரபாணி அய்யங்கார்,**

**G. B. ரெங்கனாத பாகவதர் கம்பெனி,**

ராதா விலாஸ், 19, மேலக் கடலங்குடித் தெரு, கும்பகோணம்.

---

## சிவராம் ஆதித்யராம் அண்டு கம்பெனி.

12. டபீர் மேல வீதி, கும்பகோணம்.

விலை நயம்! நாணயமான இடம்!!

எங்களிடத்தில் பட்டு, ஜவுளி தினிசுகளும், சர்டிங்கோட்டிங்துணிகளும் கம்பளிப் போர்வைகளும். பித்தளைப் பாத்திரங்களும், கைப்பெட்டிகளும், நயமாய் கிடைக்கும். வெளியூர் ஆர்டர் முக்கியமாய் கவனிக்கப்படும்.

ஸ்டேஷனரி சாமான்களும், 9, 10, 12 ரூத்தல் டிம்மிகிளேஸ் காகிதங்களும் மொத்தமாயும் சில்லரையாவும் கிடைக்கும்.

Telegrams: SWARNAM.

## KM. S. RM. KANAPPA CHETTIAR,

*Silk, yarn, lace, and cloth merchant,*

***87. BIG STREET, KUMBAKONAM.***

Large varieties always kept in stock.

Minimum profits! Maximum Sales!!

எங்களிடம் சொந்தத்தில் பலவிதமான கலர் பட்டு தினுசுகளினாலும் ஜரிகையினாலும் செய்த உயர்ந்த சேலைகளும் ரவிக்கைகளும் பெங்களூர், காஞ்சிபுரம், தர்மாவரம், வலங்கிமான் முதலிய பலவூர் பட்டு சேலைகளும் தற்காலத்துக்கேற்ற பனாரிஸ், கராச்சி, சூரத் முதலிய பலவூர் சில்க் சேலைகளும், அங்க வஸ்திரங்களும், சேலம் உள்ளூர் முதலிய வெண் பட்டு, 10×6, 8×8, உயர்ந்தது முதல் தாழ்வு வரையில் ஜோடிகளும் மற்றப்படி சேலம், மதுரை, காஞ்சீபுரம், துகிலி பலரகமான வெள்ளை வேஷ்டி ஜோடிகளும் அங்க வஸ்திரங்களும் நாணயமாகவும் விலை ரசமாகவும் சாயத்திற்கு உத்திரவாதமுள்ளதாகவும் கிடைக்கும்.

சரக்குகள் ஏராளமாய் எப்பொழுதும் ஸ்டாக் செய்திருப்பதால் வெளியில் வாங்குமுன் எங்களிடம் வந்து பார்வையிட்ட பிறகு வாங்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறது. வெளியூர் ஆர்டர்களை எப்பொழுதும் கவனிக்கப்படும்

N. B. செட்டிப் பிள்ளைகளுக்காகவேண்டிய 12 முழம்சண்டான் சேலைகளும், துயிலி வேஷ்டி ஜோடி, துப்பட்டா, பஞ்சாணிகளும் எப்பொழுதும் கிடைப்பதுடன் 20 ரூ. முதல் 200 ரூ. வரையில நூல் தினுசுகளும் லூயிஸ், கார்லியன் முதலிய ஜரிகை மார்க்குகளும் கிடைக்கும்

***THE CHEAPEST HOUSE IN SOUTHERN INDIA.***

கு. ம சு. ரும. கண்ணப்ப செட்டியார்,

பிராஞ்சு: நாகபட்டணம்.

பட்டு, ஜரிகை ஜவுளி வியாபாரம்,
பெரிய தெரு, கும்பகோணம்.

---

## விளம்பரம்.

ஸ்ரீ லலிதா நவரத்னம் என்னும் மனையடி சாஸ்திரம்
(பல கிரந்தங்களிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது).
முதற்பாகம் விலை 1—0—0. இரண்டாம் பாகம் விலை 0—8—0.
ஜலாசய நிர்மாண சாஸ்திரம் விலை 0—8—0.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவசியம்.

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

ஆர். கோபாலையா,
புலிவலம், விஜயபுரம் போஸ்டு,
தஞ்சாவூர் ஜில்லா.

# BRASS VESSELS.

**N. A. P. SARANGAPANI ALWAR - -**

**- - - S. K. RAGHAVA ALWAR.**

**KUMBAKONAM & MADURA.**

Tele Address: MINERVA. Branch: MADURA.

எங்களிடம் சகலவிதமான பித்தளை, தாம்பிரம், வெங்கலபாத்திரங்கள் சுத்தமாயும் விலை சாசமாயும் கிடைக்கும்.

ஆலயங்கள் சத்திரங்கள் ஹோட்டல்களுக்கு வேண்டிய சகல சாமான்களும் கிடைக்கும்.

N. B. ஆர்டரின்பேரில் சகலவித சாமான்களும் இஷ்டபிரகாரம் தயார் செய்து கொடுக்கப்படும்.

நா. அ. பொ. சாரங்கபாணி ஆழ்வார், S. K. ராகவ ஆழ்வார்,

பாத்திர வியாபாரம், பேட்டைத்தெரு, கும்பகோணம்.

---

## வி. கே. எஸ். மணி அய்யர் அண்டு கோ,

**நெசவுசாலை & ஜவுளி வியாபாரம்.**

**14, 15, பெரிய தெரு, கும்பகோணம்.**

எங்கள் சொந்த தறியில் உறுதியான சாயமும் பட்டிலும் ஜரிகை கலந்ததும் பலவர்ணமுள்ள சேலை முதலியவைகள் தயாராக இருக்கிறது. பெங்களூர், காஞ்சிபுரம், தர்மாபுரம், வலங்கிமான், ஆடுதுறை முதலிய பல ஊர் சேலை முதலியவைகளும் சில்க் அங்கவஸ்திரங்களும், வெண்பட்டு 10×6, 8×8, ஜோடிகளும், பலவித மில் வேஷ்டிகளும் மல்சீசுகளும் ஏராளமாய் தருவிக்கப்பட்டிருக்கிறது.

N. B. இஷ்டபடிக்குள்ள சேலைகள் தயார் செய்து கொடுக்கிறோம். மேல்கண்டவைகள் சொல்ப லாபத்துக்கே விற்கப்பட்டு வருகிறது.

**M. K. சுப்பிரமணிய அய்யர்,**

புரோப்ரைட்டர், நேஷனல் ஸ்டோர்ஸ்.

# CHEAP AND DURABLE.

Scurpulcus Honesty is the Watchword of our Firm.

Our motto is "Minimum Profit and Maximum Sale.

Large Varieties in Stock!

Any design made to order!!

Telegraphic Address: KARUNYAM.

# MUTHU. KR. M. CLOTH MERCHANT

Dealer in Yarn, Silk, Lace, various Silk Cloths, Pichambarams, different patterns of Gloths "Laced and Ordinray" in all yarn kinds etc.

**KUMBAKONAM.**

---

## முத்து. கரு. மு. முத்தய்யா செட்டியார்,

பட்டு, நூல், ஜரிகை, ஜவுளி வியாபாரம்.

கும்பகோணம்.

**A TRIAL WILL CONVINCE!**

---

## K. சதாசிவம்,

நேடிவ் டாக்டர்,

தாத விலாஸ்

1, சக்கரபாணி ஸ்வாமி மேல மடவளாகம்.

தம்பகோணம்.

1. கணை லேகியம் 96 வேளை சாப்பிடக்கூடிய டின் 1க்கு விலை ரூ 1—0—0
2. பூரணி வில்வாதி லேகியம் 48 வேளை சாபபிடக் கூடிய டின் 1-க்கு விலை ரூ 2—8—0
3. குமரித் தைலம் 8 அவுன்ஸ் அடங்கிய டின் 1-க்கு விலை ரூ 1—8—0
4. மாணிக்கப் பற்பொடி டப்பி 1-க்கு விலை ரூ 0—4—0
5. தங்கச் செந்தூரம் 16 வேளை சாப்பிடக்கூடிய அளவுள்ளது விலை ரூ 4—0—0

உ

சிவமயம்

முத்து. கரு. வெ. அளகப்ப செட்டியார்.

**MUTHU. KR. V. SON.**

4, 5, BAPUNAICKAN STREET,

கும்பகோணம்.

Tel. Address : **WEALTH.**

விலை நயம்! நாணயமான இடம்!!

எங்களிடத்தில் கோருபட்டு, நூல்ஜரிகை, பலதினிசு பட்டு ஜவுளிகளும் ஏராளமான ஸ்டாக் வைத்து நடத்தி வருகிறோம். ஆர்டர்களையும் தயாரித்து சொன்ன டயத்திலும் கொடுக்கப்படும்,

---

# TO LET.

---

உ

ஸ்ரீராமஜெயம்.

கவனியுங்கள்!

பலவர்ணபட்டில் ஜரிகைநயிமுறல் ஜகாட்மெஷீனில் வேலைசெய்த ரவிக்கை, சேலைகள், பலவர்ண பட்டு அங்கவஸ்திரங்கள் நோட்டமுள்ளதாய் கிடைக்கும்,

ராயா. கோ. வரதய்யர்,

பட்டுநூல் புதுத்தெரு, கும்பகோணம்.

# V. S. K. IYER & SONS,

Proprietor:

Tel. Address: GANESH.

Valangiman KRISHNASWAMIER,
Export & Import merchants
Commission agents, kumbakonam.

எங்களிடம் உயர்ந்த ஜரிகை கோரா, சாயச்சரக்குகள் உத்தரவாத முள்ள பல நிறுசு ஜவுளிகளும் கிரமமான விலைக்கு விற்கப்படும்.

வர்த்தகர்களுக்கும் மொத்தமாஜ வாங்குகிறவர்களுக்கும் ஸகாயம் செய்து கொடுக்கப்படும்.

வி. எஸ். கே ஐயர் அண்டு சன்ஸ்,
7. ராமசுவாமி கோவில் கீழவீதி,
கும்பகோணம்.

175898

---

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

Telegrams:—RAMANUJAM.

## N. K. R. JAMBAKALAKSMI AMMAL,

Metal merchant,
Ramanuja Vilâs, Kumbakonam.

Head Office:—NATCHARKOVIL.

BRANCHES:
Vijayapuram
Mannargudi
Srirangam &
Pudukota.

எங்களிடம் சகலவிதமான பித்தளை, தாம்பிரம், வெண்கலப்பாத்திரங்கள் சுத்தமாயும் விலை நயமாகவும், அழகாகவும் கிடைக்கும். ஆலயங்கள், சத்திரங்கள் ஹோட்டல்கள், ஹாஸ்டல்கள், இவைகளுக்கு வேண்டிய சகல சாமான்களும் கிடைக்கும். ஆர்டரின் பேரில் எவ்விதசாமான்களும் இஷ்டப்பிரகாரம் செய்து கொடுக்கப்படும். வியாபாரிகளுக்கும் வேண்டிய ரகங்கள் சப்ளை செய்யப்படும். சில்லரை வியாபாரங்களுக்கும் எவ்விதமான சாமான்களும் செய்யப்படும்.

நா. கோ. ரா. ஜெம்பகலக்ஷ்மி அம்மாள்.

வெங்கலபாத்திர வியாபாரம்.

பொற்றாமரைவடகரை கும்பகோணம்.

ஸ்ரீ வெங்கடாஜலபதிஸ்வாமி துணை.

## மகாமகம்! ❁ புண்யகாலம்!!

# ஜவுளி வியாபாரம்!!!

எங்களிடம் முதல் தரமான பட்டு ஜரிகையில் தயார் செய்த பல கலர்களில் ஜரிகை சேலைகளும், உயர்ந்த ஜரிகை ரவிக்கைகளும், சுத்த பட்டு பெங்களூர் முந்தி பல கலர்களிலும், பல கட்டங்களிலும் தயார் செய்த சேலைகளும், ஜரிகை உருமால்களும் வெண்பட்டில் உயர்ந்த 10×6, 8×8 வேஷ்டிகளும், அங்க வஸ்திரங்களும், சர்ட்டிங் கோட்டிங் சில்க்களும் உயர்ந்த சாதா சேலைகளும், சொந்த தரியில் தயார் செய்து சரஸமான விலைக்கு விற்றுமுதல் செய்து வருகிறோம். ஆகையால் கீழ்க்கண்ட விலாசத்துக்கு தங்களுடைய வரவை எதிர்பார்க்கிறோம்.

ஜெம்பு ரெ. கோ. வெங்கடாஜலபதி அய்யர்,
18, பிர்மன் கோவில் தெரு,
கும்பகோணம்.

---

உ

சிவமயம்.

## K. LAKSHMANA CHETTIAR,

***BRASS SHEETS & VESSEL MERCHANT,***

**PETTAI STREET, KUMBAKONAM.**

எங்களிடம் கைதீர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டும், பெங்களூர், மைசூர், காஞ்சிபுரம், காளாஸ்தி பாலக்காடு, திருநெல்வேலி முதலான வெளியூர்களிலிருந்தும், வேலைத்தரமாயுள்ள பித்தளைப் பாத்திரம், வெண்கல பாத்திரம், தாம்பிர பாத்திரங்களும், மற்றும் முதலான தினுசுகளும் நயம் சரக்குகளாகவும், சல்லிசான விலைக்கும் கிடைக்கும். எவ்வித ஆர்டர் பாத்திரங்களும் குறிப்பிட்ட காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

கா. லட்சுமண செட்டியார்,
பாத்திர வியாபபாரம், பேட்டைத்தெரு,
கும்பகோணம்.

சிறந்த

# இந்திய வாசனைத் திரவியங்கள்.

**தங்கம் வெள்ளி மெடல்களும், உயர்ந்த நற்சாக்ஷிப்பத்திரங்களும் பரிசளிக்கப்பட்டு நன்குமதிக்கப்பட்டவை.**

சகோதரர்களே!

எங்கள் வஸ்துக்கள் உயர்ந்த இந்து தேச சம்மந்தமான சாமான்களானதால் நீங்கள் மிகுந்த பிரீதியுடன் விரும்புவீர்களென்று நம்புகிறோம். எங்களிடமிருக்கும் சிரேஷ்டமான வஸ்துக்களில் சிலவற்றை இங்கே வரைந்துள்ளோம். எங்கள் வியாபார அடையாளம் "**கோபாலகிருஷ்ணன்**" ஆகையால் கோபாலகிருஷ்ணன் டிரேட் மார்க்கை (**Trade Mark**) பார்த்து வாங்கும்படி கோருகிறோம்.

| | |
|---|---|
| சந்தனாதித் தைலம் | பற்பொடி |
| அரைக்கீரை விதைத் தைலம் | இந்தியன் பே[illegible]மேட் [கள் |
| சம்பங்கித் தைலம் | பல காயகறிவருகாய் தினுசு |
| வாசனைப்பாக்கு | அரகஜா |
| தாம்பூல கொப்பரைச் சீவல் | அம்பர் |
| வாசனைச் சுண்ணம் | ஜவ்வாது |
| கேசர் பவுடர் | புனுகு [கள் |
| சந்தனப் பவுடர் | ஊதுவத்தியில் பலவித ரகங |
| வாசனைப் பொடி | பலவித செண்டு ரகங்கள் |
| தாதுபுஷ்டி ரோஜா குல்கந்து | அத்தர் தினுசுகள் |
| தசாங்கம் | வாசனைச் சந்தனம் |

தயவு செய்து ஒரு தடவை இதை வாங்கிப் பரீக்ஷித்துப் பாருங்கள். அன்புடன் எங்கள் கேட்லாக்கை வாங்கிப் பாருங்கள்.

கே. ஆர். வி. அண்டு கோ,

K. A. ஸ்ரீனிவாசய்யங்கார், அத்தர் வியாபாரி,

புரொப்ரைட்டர். கும்பகோணம்.